**11. அசமஞ்சதன் கதை**

சகர மன்னன் என்னும் அரசனுக்கு இவன் புதல்வனாகத் தோன்றினான். இளைஞனான பிறகுங்கூட இவனிடம் எத்தகைய ஊக்கமும் உண்டாகவில்லை. 'நாம் தான் பெருஞ் செல்வ நிலையில் இருக்கிறோம், நம்முடைய தந்தைக்குப் பின் நாடு நம்மைச் சேரப்போகிறது. நாம்



காரியங்களிற் புகுந்து துன்புறுவானேன். என்றும் இன்புறுதலே நம்முடைய கடமையாகும்' என்று இவன் நாளும் எண்ணிக் கொண்டு சோம்பேறித் தன்மையிலேயே ஆழ்ந்திருந்தான். திருமணமாகி மக்கட்பேற்றை யடைந்த பிறகுகூட இவனுடைய மனநிலை மாறவில்லை. இவனுடைய போக்கு இவனுடைய தந்தைக்குப் பிடிக்கவில்லை. நாட்டை இவ னிடம் விட்டால் அழிந்துபோகும் என்று முடிவு செய்தான். தன் நாட்டைத் தனக்குப் பிறகு தன்னுடைய பெயரனே ஆளவேண்டும் என்று ஏற்பாடு செய்துவிட்டான். அதனால் அசமஞ்சதன் எத்தகைய சிறப்பும் இல்லாமல் நடைப் பிணம் போல் திரியவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. உலகத்தை யெல்லாம் அரசாளுஞ் செல்வநலம் அமைந் திருந்தாலுங்கூட மடியுடையவர்கள் சிறந்த பயனை அடை தல் அருமையே யாகும் என்பதனை இவன் உலகிற் குணர்த் தினான்.

[மடியின்மை]